Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam

**CASE NO.CC. 184/2025 PW-1**

Name : ரோஸ்
Father / Husband name : ஜோதி
Village : பெருமாள்பேட்டை
Age : 42
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.08.2026

Accused present. Both side counsel present. Witness Identified by Vellimedupettai PS HC 1967 Tr.Selvam.

**முதல் விசாரணை**

நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். கடந்த 2020 ம் ஆண்டு ஒருநாள் காலை சுமார் 9 மணியளவில் நான் 100 நாள் வேலைக்காக சென்றிருந்தேன். பின்பு வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது வீட்டின் தகவு திறந்திருந்தது. பின்பு பீரோ திறந்திருந்தது. அதில் வைத்திருந்த செயின் - 3 பவுன், மோதிரம் - 1 பவுன், கால்காசு - 5 எண்ணிக்கை, தோடு - 1 பவுன் உட்பட மொத்தமாக 8 பவுன் நகைகள் காணாமல்போனது. பின்பு வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். பின்னர் 6 மாதம் கழித்து போலிசார் அழைத்து எனது நகைகளை காண்பித்தார்கள், அதனை நான் அடையாளம் காண்பித்தேன். காவல் நிலையத்தில் ஆஜர் எதிரி இருந்தார். அவர் தான் குற்றவாளி என்று போலிசார் என்னிடம் சொன்னார்கள். பின்னர் 3 1/2 பவுன் நகைகளை நீதிமன்றத்தில் மனுவின்பேரில் இடைக்காலப்பொறுப்பில் பெற்றுச்சென்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்தில் எந்த தேதியில் எத்தனை மணிக்கு எதிரியை காண்பித்தார்கள என்றால் தேதி நினைவில்லை, நேரம் காலை 10 மணி இருக்கும். புகாரை யார் எழுதியது என்றால் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் ஒரு போலிசார் எழுதினார். நான் சொன்னதை தான் அவர் எழுதினார் என்றால் சரிதான். புகாரில் எனது இளைய மருமகன் சத்தியமூர்த்தி மீது சந்தேகம் இருப்பதாக சொன்னேனா என்றால் போலிசார் கேட்டார்கள், நான் சத்தியமூர்த்தி மீது சந்தேகமாக இருப்பதாக சொன்னேன். நகை காணாமல்போன அன்றையதினமே புகார் கொடுத்தேனா அல்லது மறுநாள் கொடுத்தேனா என்றால் அன்றையதினமே மாலை சுமார் 04.00 - 04.30 மணியளவில் கொடுத்தேன். அதன்பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது வீட்டில் அடிக்கடி நகைகள் காணாமல் போகும் என்று புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, இதுவே முதன்முறை. போலிசார் உண்மையான குற்றவாளியை கண்டுபிடிக்காமல் எதிரியின் மீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளார்கள், எதிரி உண்மையான குற்றவாளியென்றால் அனைத்து நகைகளையும் கைப்பற்றியிருப்பார்கள் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் உள்ள நபர்கள் தான் நகையை தேவைக்காக எடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.